*பத்தோடு எட்டு படி மேல் இருப்பவனாம்*
*பற்றோடு பணிவோர்க்கு பக்கம் இருப்பவனாம்*
*முத்தான தமிழ் பாட்டில் மோகம் கொல்பவனாம்* (2)
*மகர ஜோதி வடிவில் காட்சி தருபவனாம்*

(பேட்டை)

*அஞ்சாத வீரம் கொண்ட வில்லாலனாம்*
*அவன் தஞ்சம் என்று வருவோருக்கு தஞ்சம் நின்றவனாம்*
*நெஞ்சினிலே நினைப்போர்க்கு நினைந்து நிற்பானாம்*
*நிலையான வாழ்வு தன்னை கொடுத்து நிற்பானாம்*

(பேட்டை)

# அரோகரா அரோகரா

அரோகரா - அரோகரா
அரோகரா - அரோகரா
அங்கேயும் ஆடினார் - அரோகரா
இங்கேயும் ஆடினார் - அரோகரா
அப்படியும் ஆடினார் - அரோகரா
பார்த்தவரும் ஆடினார் - அரோகரா
பக்தர் எல்லாம் ஆடினார் - அரோகரா
குருசாமியும் ஆடினார் - அரோகரா

பத்து மலை முருகனுக்கு மொட்டை போடுவோம்
எங்க வீரமணி கண்டனுக்கு மாலை போடுவோம்

பத்து மலை முருகனுக்குக் காவடி எடுப்போம்
எங்க வீரமணி கண்டனுக்கு இருமுடி எடுப்போம்

தண்ணீர் மலை முருகனுக்கு மயில் வாகனம்
எங்க வீரமணி கண்டனுக்குப் புலி வாகனம்

கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா,
பாலனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா

தண்ணீர் மலை முருகனுக்கு வேலாயுதம்
எங்க வீரமணி கண்டனுக்கு வில்லாயுதம்

தண்ணீர் மலை முருகனுக்கு வள்ளி தெய்வானை
எங்க வீரமணி கண்டனோ பிரம்மச்சாரி

தண்ணீர் மலை முருகனுக்குக் காவடியாட்டம்
எங்க வீரமணி கண்டனுக்குப் பேட்டைதுள்ளாட்டம்

கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா,
பாலனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா

தண்ணீர் மலை முருகனுக்குப் பொய்கை நதி
எங்க வீரமணி கண்டனுக்குப் பம்பா நதி

தண்ணீர் மலை முருகனுக்குச் சங்கு நாதம்
எங்க வீரமணி கண்டனுக்குச் சரண கோசம்

தண்ணீர் மலை முருகனுக்குப் பாலாபிஷேகம்
எங்க வீரமணி கண்டனுக்கு நெய் அபிஷேகம்

கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா,
பாலனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா

தண்ணீர் மலை முருகனுக்கு ஆறு படை
எங்க வீரமணி கண்டனுக்கு ஐந்து மலை

தண்ணீர் மலை முருகனோ அசுரனை வென்றார்
எங்க வீரமணி கண்டனோ மகிஷியை கொன்றார்

*தண்ணீர் மலை முருகனுக்கு ஆண்டி கோலம்*
*எங்க வீரமணி கண்டனோ தவக்கோலம்*

*கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா,*
*பாலனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா*

*தண்ணீர் மலை முருகனோ நாட்டு வாசி*
*எங்க வீரமணி கண்டனோ காட்டு வாசி*

*தண்ணீர் மலை முருகனுக்கு பஞ்சாமிர்தம்*
*எங்க வீரமணி கண்டனோ பானக பிரியன்*

*கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா,*
*பாலனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா*

# சந்தனம் குலைச்சி வச்சேன்

சந்தனம் குலைச்சி வச்சேன்
சரம் சரமா சரணம் வச்சேன்
சாமி வரலையே, குரு சாமி வரலையே

அந்தியிலே பூசை வச்சேன்
அரும் அரும்பா சரணம் வச்சேன்
ஐயா உனக்கு நெய்யால் விளக்கு ஏத்தி வச்சேனே
வழி பாத்து வச்சேனே
பந்தள் விளக்கு வச்சேன் பரிமாற சாதம் வச்சேன்
சாதம் எல்லாம் ஆறி போச்சு மனசு ஆறலையே
எந்த சாமியும் வரலையே

சந்தனம் குலைச்சி வச்சேன்
சரம் சரமா சரணம் வச்சேன்
சாமி வரலையே, குரு சாமி வரலையே
சாமி வரலையே, குரு சாமி வரலையே

வாழ மரத்த கட்டி மேல தாளம் நாளும் கொட்டி
கன்னி பூசை செய்ய எனக்கு வசதி இல்லையே
ஏழை வயிற்ற கட்டி கடண உடன வாங்கி
பூசை செஞ்சு வச்சேன் சொன்னபடி யாரும் வரலையே

பாத பூசை பன்ன பனிவோடு சேவை பன்ன
வாசல் பார்த்திருக்கேன்..... சாமி வரலையே

பஜனை பாட்டெடுக்க பசியோடு சோறெடுக்க
ஐயா உன் பிள்ளைகளோ..... வரவில்லையே

நிற குறைய்ய எடுத்துச் சொல்ல குருவும் வரலையே
நா..ன் நிற்கதியா நின்ன வேள நீயும் வரலையே

சந்தனம் குலைச்சி வச்சேன்
சரம் சரமா சரணம் வச்சேன்
சாமி வரலையே, குரு சாமி வரலையே
சாமி வரலையே, குரு சாமி வரலையே

கோவில் குளமிருந்து கூப்பிட்டவர் குறல் மறந்து
குருசாமி உன் நினைப்பில் இருந்துவிட்டரோ.....
கட்டு முடி கட்டி செல்லும் சின்ன மணி மண்டபத்தில்
என் சோட்டு சாமிகளும் இருந்துவிட்டரோ.....

ஜோதி பயனத்திற்க்கு தோதாக சீட்டெடுக்க
போனவக பொழுது பட்டும் திரும்பலையோ
சோதனை எனக்கு வச்சி சாமிகள மறக்க வச்சி
நாடகம் நடத்துரையோ புரியலையோ

அம்புப் பிடியாய் கம்பன் குடியில் அன்னம் கேட்ட
ஐயப்பா
என்னை இங்கே தன்னம் தனியாய் புலம்ப விட்டது
ஏனப்பா

அம்புப் பிடியாய் கம்பன் குடியில் அன்னம் கேட்ட

ஐயப்பா
என்னை இங்கே தன்னம் தனியாய் புலம்ப விட்டது
ஏனப்பா

அச்சன் கோவில் ஐயப்பா, ஆலும் பேரும் எங்கப்பா
எத்தனை நேரம் பித்தனை போல காத்திருக்கேன்
பாரப்பா
பூஜை என்ன விளையாட்டா, மனசின் வலியை
சொல்லட்டா
சத்திய சோதனை இத்துடன் போதும் சாமிமார்களை
கட்டாப்பா

ஹரிசுதனே........
அரியவனே.........
அருள்தரவா...... ஆண்டவனே

கலைமகனே.....
மாயவனே.......
அருள்தரவா..... என் ஐயனே

சாமியே.......ஐ
ஏழைக்கருள் புரிந்தவனே.......சரணம் ஐயப்போ
எங்கள் குல விளக்கே.........சரணம் ஐயப்போ
அன்னதான பிரபுவே.........சரணம் ஐயப்போ

சாமி......
சந்தனம் கமகமக்க சரம் சரமா சரணம் சொல்லி

சாமி வந்தாரே, குரு சாமி வந்தார்களே
சாமி வந்தாங்க ஐயப்ப சாமிங்க வந்தாங்க

சாமியே.....சரணம் ஐயப்போ